# <u>திண்டிவனம் நகராட்சி</u>

## <u>கொரோனா விழிப்புணர்வு வாரம் (01.08.2021 முதல் 07.08.2021)</u>

The Hon'ble Chief Minister has proposed to launch a "COVID-19 Awareness Campaign" on 31.07.2021 at Chennai.

2. It has also been planned to conduct a week long COVID-19 Awareness Campaign in the Districts from 01.08.2021 to 07.08.2021 with the following IEC activities:

**Day 1 (1/8/2021)**

- Flyers/leaflets/brochures release & distribution
- Social media awareness posts –Twitter/ Facebook/ Instagram
- Local Cable Television talk show/ live coverage of events

மண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க இந்நகராட்சியில் 01.08.2021 முதல் 07.08.2021 வரை கொரோனா நோய்தடுப்பு விழிப்புணர்வு வாரமாக கொண்டாடப்பட்டது.

## <u>01.08.2021 அன்று நடத்தப்பட்ட நிகழ்வுகள்</u>

முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை அன்று கொரோனா விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. முன்னதாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நகராட்சி அலுவலகத்தில் வண்ணக்கோலங்கள் போடப்பட்டு, நகராட்சி அலுவலர்கள், வருவாய் துறை அலுவலர்கள், காவல்துறை அதிகாரிகள், பொது சுகாதார துறை அலுவலர்கள், வியாபாரிகளின் நல சங்கங்கள், லயன்ஸ் கிளப், தன்னார்வலர்கள், அப்போலோ மற்றும் மயிலம் தனியார் நர்சிங் பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருடன் கொரோனா விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கப்பட்டடு, நகராட்சி அலுவலகத்திலிருந்து பேண்ட் வாத்தியத்துடன் தேவாங்கர் தெரு, காமாட்சி அம்மன் கோயில் தெரு, புது மசுதி தெரு, நேரு வீதி வழியாக புறப்பட்டு இறுதியாக பழைய நகராட்சி அலுவலகத்தில் விழிப்புணர்வு ஊர்வலம் நிறைவு பெற்றது. ஊர்வலத்தில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள், முககவசம் வழங்கப்பட்டது. மேலும் விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி, கொரோனா விழிப்புணர்வு கோஷம் இடப்பட்டது. இப்பேரணி சுமார் இரண்டு கிலோமீட்டர் துரம் நடைபெற்று நிறைவடைந்தது. இப்பேரணியில் சுமார் 300 நபர்கள் கலந்துகொண்டனர்.






திண்டிவனத்தில்

**பொதுமக்களிடம் கொரோனா தடுப்பு விழிப்புணர்வு**

திண்டிவனம், ஆக.3- தமிழகத்தில் கொரோனா தொற்று பரவலை தடுக்கும் வகையில், பொதுமக்களிடையே கொரோனா குறித்து ஒருவாரம் (7-ந்தேதி வரை) விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் என்று தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில், திண்டிவனம் நகராட்சியில் கொரோனா தொற்று பரவலை தடுக்கும் வகையில் நேற்று பொது சுகாதாரத் துறை மற்றும் திண்டிவனம் நகராட்சி ஆகியன இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இதையொட்டி அதிகாரிகள் அனைவரும் நகராட்சி ஆணையர் சவுந்தரராஜன் தலைமையில் உறுதி மொழி எடுத்துக்கொண்டனர். தொடர்ந்து பொதுமக்களிடம் தனிமனித இடைவெளியை கடைபிடிப்பது, முககவசம் அணிதல், தேவையின்றி வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம், கைகளை அடிக்கடி சோப்பு போட்டு கழுவுதல், தடுப்பூசி போட்டுக்கொள்ளுதல் போன்ற பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கினர்.

இதில் பி.ஆர்.எஸ். துணிக்கடை உரிமையாளர் ரங்கமன்னார் செட்டியார், ராம் டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் வெங்கடேசன், சுகாதார அலுவலர் மோகன், ஆய்வாளர் ராமகிருஷ்ணன், ஜெயபுரம் ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர் விஷ்ணு குமரன், டாக்டர் முரளி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# நாள். 2 – 02.08.2021

Day 2 (2/8/2021)

- Mass hand washing events
- Mask use & Social distancing awareness in public places like bus stand , railway station and shopping areas

## 02.08.2021 அன்று நடத்தப்பட்ட நிகழ்வுகள்

இரண்டாம் நாளான திங்கட்கிழமை அன்று கொரோனா தொற்று பரவாமல் இருக்கும் வகையில் கைகளை சுத்தமாக வைத்திருக்க நகரத்தின் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கைகளை சுத்தமாக பராமரிக்கும் முறைப்பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பொது மக்கள் அதிகம் கூடம் இடங்களான நகராட்சி அலுவலகம், தாலுக்கா அலுவலகம், அம்மா உணவகம், பழைய நகராட்சி அலுவலகம், ஆர்யாஸ் உணவகம், சென்னை பேருந்து நிறுத்தம், விழுப்புரம் பேருந்து நிறுத்தம் மற்றும் செஞ்சி பேருந்து நிறுத்தம் மற்றும் அரசு சுகாதார நிலையம் போன்ற இடங்களில் கைகளை சுத்தமாக கழுவும் முறை குறித்து பொதுமக்களுக்கு செய்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. மாண்புமிகு சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் அமைச்சர் அவர்கள் தாலுக்க அலுவலகத்தில் அமைக்கப்பட்ட செய்முறை விளகத்தில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு கைகழுவும் முறை குறித்து செய்முறை விளக்கம் செய்து காண்பித்தார், மற்றும் கூடி இருந்த பொது மக்களுக்கு கபசுர குடிநீரும் வழங்கப்பட்டது. மேலும் பொது மக்கள் மற்றும் வியாபார நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் முககவசம் அணியவும் மற்றும் கூடியிருந்த பொதுமக்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் முகக்கவசம் வழங்கப்பட்டது.

பொது இடங்கள், அனைத்து வணிக வளாகங்கள் நுழைவு வாயிலில் சோப்பு மற்றும் கை சுத்திகரிப்பான் (Soap and Hand sanitizer) வைக்கவும், மற்றும் சமுக இடைவெளி கிடைபிடிக்கவும் பொது மக்கள் மற்றும் கடையில் பணிபுரியும் பணியாளர்கள் கண்டிப்பாக முககவசம் அணியவும் அறிவுறுத்தப்பட்டது. அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிக்காத பொது மக்கள் மற்றும் அனைத்து வியாபார நிறுவனங்களுக்கு அபராத தொகை வசுலிக்கப்பட்டது.






### திண்டிவனத்தில் அமைச்சர் மஸ்தான் கொரோனா விழிப்புணர்வு

விழுப்புரம், ஆகஸ்ட் 03: விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம்தாலுக்காஅலுவலகம் சந்திப்பில் சிறுபான்மை மற்றும் வெளிநாடுவாழ்தமிழர்நலன்துறை அமைச்சர் செஞ்சி. மஸ்தான் பொதுமக்களிடையேவிழிப்புணர்வு ஏற்படுத்தினார். இதில் கைகளை சுத்தமாக கழுவுதல், சமூக இடைவெளி பின்பற்றுதல் முகக் கவசம் அணிதல் போன்ற விழிப்புணர்வுகளை மக்களுக்கு தெரிவித்து துண்டுபிரசுரங்களையும் பொதுமக்களிடம்வழங்கினார். இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேதுநாதன், மாநில மருத்துவ அணி துணை செயலாளர் டாக்டர் சேகர், மாநில பொதுக்குழு உறுப்பினர் ரமணன், பாபு, வழக்கறிஞர் பிரிவு அமைப்பாளர் ஆதித்யன் உள்ளிட்ட மூத்த நிர்வாகிகள். திண்டிவனம்நகராட்சிஆணையாளர் சௌந்தர்ராஜன். கலந்து கொண்டு. கொரோனாவுக்கு நோய் தடுத்தல் குறித்து உறுதி மொழி எடுத்தனர்

## நாள். 3 – 03.08.2021

> Day 3 (3/8/2021)
> - Traders Association awareness meeti gs
> - Private hospitals and IMA Sponsored awareness campaigns / local events

## 03.08.2021 அன்று நடத்தப்பட்ட நிகழ்வுகள்

மூன்றாம் நாளான செவ்வாய்கிழமை அன்று கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக அனைத்து வியாபார நலசங்களின் பிரதிநிதிகள், தனியர் மருத்துவர்கள் மற்றும் இந்திய மருத்துவ கழகத்தில் உள்ள அனைத்து மருத்துவ பிரதிநிதிகளுக்கும் கொரோன நோய் தொற்று தடுப்பு குறித்து செய்யப்பட வேண்டிய பணிகள் குறித்து கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. இதில் 50 நபர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்திரவின் பேரில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கொரோனா விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ராட்சத பலுன்கள் நகராட்சி அலுவலகம் மற்றும் மயிலம் ரோட்டில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்திலும் பறக்கவிடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சார் அட்சியர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.






திண்டிவனம் நகராட்சி சார்பில்

### கொரோனா விழிப்புணர்வு

► திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் சவுந்தர்ராஜன் தலைமையில் கொரோனா விழிப்புணர்வு அடங்கிய ராட்சத பலூன் பறக்கவிடப்பட்டது.

திண்டிவனம், ஆக. 4: கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கையாக அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நேற்று திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் கொரோனா விழிப்புணர்வு அடங்கிய ராட்சத பலூன் நகராட்சி ஆணையர் சவுந்தர்ராஜன் தலைமையில் பறக்கவிடப்பட்டது. இதேபோல் மயிலம் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அனைத்து சங்கங்கள், தன்னார்வலர்கள், தனியார் வங்கி ஊழியர்கள், தனியார் மருத்துவர்கள், மருந்தக சங்கங்கள் ஆகியோரை ஒன்றிணைத்து கொரோனா விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. இதில் நகராட்சி பொறியாளர்கள் பவுல் செல்வம், தேவநாதன், துப்புரவு அலுவலர் மோகன், துப்புரவு ஆய்வாளர் ராமகிருஷ்ணன், பணி ஆய்வு ஆரோக்கியா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நாள். 4 – 04.08.2021

Day 4 (4/8/2021)

- Highway travelers awareness campaigns in Toll plazas
- Short film competition
- Immunity Boosters distribution by Indian Medicine Department (Kabasura Kudineer, Amakura Tablets)

## 04.08.2021 அன்று நடத்தப்பட்ட நிகழ்வுகள்

நான்காம் நாளான புதன்கிழமை அன்று கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் வகையில் பொது மக்களுக்கு எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வகையில் நகரில் மக்கள் அதிகம் கூடும் இடங்களான கபசுர குடிநீர் விநியோகிக்கப்பட்டது. நகராட்சி அலுவலம், செஞ்சி பேருந்து நிலையம், காந்தி திடல் அருகில், பழைய நகராட்சி அலுவலகம், சென்னை பேருந்து நிலையம் மற்றும் விழுப்புரம் பேருந்து நிலையம், அர்யாஸ் உணவகம், அம்மா உணவகம், ரயில்நிலையம் மற்றும் ஜெயபுரம் அரசு மருத்துவமனை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கபசுர குடிநீர் பொது மக்களுக்கு வழங்கப்பட்டும், பேருந்தில் செல்லும் மக்களுக்கும் கபசுர குடிநீர் வழங்கப்பட்டு கொரோனா விழிப்புணர்வு பற்றிய விழிப்புணர்வு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.






## நாள். 5 – 05.08.2021


**Day 5 (5/8/2021)**

- Online / in-person Posters designing contest
- Online drawing competition
- Slogan writing on COVID awareness


## 05.08.2021 அன்று நடத்தப்பட்ட நிகழ்வுகள்

ஐந்தாம் நாளான வியாழன்கிழமை அன்று பொது மக்களுக்கு கொரோனா பற்றிய விழிப்புணர்வு மற்றும் கொரோனா நோய் தடுப்பு பற்றிய வழிமுறைகளை அறிவுறுத்தும் வண்ணம் பொது மக்கள், மாணவ மாணவியர்களுக்கு கொரோனா விழிப்புணர்வு பற்றிய போட்டிகள் வைத்து Online மற்றும் Offline மூலம் கொரோனா விழிப்புணர்வு சம்மந்தமான போஸ்டர் டிசைன்கள், வரைதல் போட்டி, விழிப்புணர்வு வாசகங்கள் எழுதுதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் இந்நகர சார் ஆட்சியர் அவர்களால் இந்திராகாந்தி பேருந்துநிலையம் மற்றும் நேருவீதியில் போன்ற இடங்களில் கொரோனா விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு கொடுத்து சிறப்பித்தார். மேலும், நகராட்சி அலுவலகம், தாலுக்கா அலுவலகம் மற்றும் விழுப்புரம் பேருந்து நிலையங்களில் பொது மக்களுக்கு கொரோனா நோய் தொற்று விழிப்புணர்வு வாசகங்களை எழுதக்கூடிய போர்டுகள் வைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.





## நாள். 6 – 06.08.2021

Day 6 (6/8/2021)

- Online Quiz competition about COVID awareness among students
- FM radio slot on whole day
- Meme writing on corona awareness
- Skit/ Role play/ Street play with folk artists

## 06.08.2021 அன்று நடத்தப்பட்ட நிகழ்வுகள்

ஆறாம் நாளான வெள்ளிக்கிழமை அன்று நகராட்சி அலுவலர்களை கொண்டு 100 சதவீதம் கொரேனா தடுப்பூசி போட்டுகொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அனைத்து நகராட்சி பணியாளர் மற்றும் அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள், வருவாய் துறை அலுவலர்கள், பொது சுகாதாரத்தறை அலுவலர்கள், லயன்ஸ் கிளப், தன்னார்வலர்கள், அப்போலோ மற்றும் மயிலம் தனியார் நர்சிங் பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருடன் கொரோனா விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கப்பட்டடு, நகராட்சி அலுவலகத்திலிருந்து தேவாங்கர் தெரு, காமாட்சி அம்மன் கோயில் தெரு, புது மசூதி தெரு, நேரு வீதி, பாரதி தெரு வழியாக காலேஜ் ரோட்டில் உள்ள பழைய வால்டர் மேல்நிலைப்பள்ளியில் விழிப்புணர்வு ஊர்வலம் நிறைவு பெற்றது. ஊர்வலத்தில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள், முககவசம் வழங்கப்பட்டது. மேலும் விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி, கொரோனா விழிப்புணர்வு கோஷம் இடப்பட்டது. இப்பேரணி சுமார் மூன்று கிலோமீட்டர் துரம் நடைபெற்று நிறைவடைந்தது. இப்பேரணியில் சுமார் 400 நபர்கள் கலந்துகொண்டனர்.






திண்டிவனத்தில் கொரோனா விழிப்புணர்வு பேரணி நடந்தது.

திண்டிவனத்தில்

### கொரோனா விழிப்புணர்வு பேரணி

திண்டிவனம்,ஆக.6–

திண்டிவனம் நகராட்சி, ஆரம்ப சுகாதார நிலையம், வியாபாரி சங்கங்கள் இணைந்து கொரோனா விழிப்புணர்வு பேரணி நடத்தினர். இந்த பேரணியை திண்டிவனம் போலீஸ் டி.எஸ்.பி. கணேசன் மற்றும் நகராட்சி ஆணையாளர் சவுந்தர்ராஜன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். இந்த பேரணி திண்டிவனம் நகராட்சியில் இருந்து தொடங்கி திண்டிவனம் முக்கிய வீதி வழியாக சென்று மீண்டும் நகராட்சியில் வந்து முடிவடைந்தது.தடுப்பூசி போடுவதன் அவசியத்தை பற்றியும், சமூக இடைவெளியை கடைபிடிப்பது பற்றியும் பதாகை ஏந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.தடுப்பூசி போட்டுக்கொண்ட அனைவரும் கழுத்தில் ஐ.டி கார்டு தொங்கவிட்டு சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.